பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 118

திங்கட்கிழமை
24 மார்ச் 2025

பங்குனி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**அரிசிக்கு மீண்டும் தட்டுப்பாடு?**

» 02

## உடைமையில் ஹெரோய்ன் இருவர் கைது

யாழ்., மார்ச் 24
ஹெரோய்ன்போதைப் பொருளை உடைமை யில் வைத்திருந்த குற் றச்சாட்டில் யாழ்ப்பா ணம் நகரப்பகுதியில் வைத்து நேற்று இளை ஞர்கள் இருவர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

10



தையிட்டி திஸ்ஸ விகாரையில்
வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரால்

# சட்டவிரோதக் கட்டடம் நேற்றுத் திறந்துவைப்பு!

சிவில் உடையில் திரண்டனர்
பொலிஸாரும், இராணுவத்தினரும்

**யாழ்ப்பாணம், மார்ச் 24**

**தையிட்டில் சட்டவிரோதமாகப் பொதுமக்களின் காணியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையில், புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு நேற்றுத் திறக்கப் பட்டது. இந்தப் புதிய கட்டடத்தை வடக்கு மாகாண பிர திப் பொலிஸ்மா அதிபர் தனபால, சம்பிர தாயபூர்வமாகத் திறந்துள்ளார்.**

11

## காய்ச்சலால் ஒருவர் உயிரிழப்பு

யாழ்., மார்ச் 24
காய்ச்சலால் பீடிக்கப் பட்டு மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டவர் உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி, தருமபுரத் தைச் சேர்ந்த நடராசா இன்பராசா (வயது- 56) என்பவரே உயிரி ழந்தவரா வார்.

10



## வரிசை கட்டிய அரச வாகனங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 24
தையிட்டியில் சட்டவிரோத திஸ்ஸ விகாரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பிறிதொரு கட்டடம் நேற்றுத் திறந் துவைக்கப்பட்டிருந்தநிலையில், அதில் கலந்துகொண்ட பொலிஸ் உயர் அதிகாரிகளும், இராணுவ அதிகாரிக ளும் அரச வாகனங்களில் வந்தே நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர்.

11

**வடமராட்சியில் நேற்றும் பெருந்தொகை கஞ்சா மீட்பு**

» 03

## தையிட்டிக்காணி அபகரிப்பு; மக்கள் நேற்றும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24
தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகா ரையில் புதிய கட்டடம் ஒன்று நேற்றுத் திறக்கப்பட்ட நிலையில், அதற்கு எதிராகக் காணி உரிமையாளர்க ளும், பொதுமக்களும், அரசியற்கட்சிகளும் இணைந்து பெரும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன் னெடுத்தனர்.

10

## புதிய அரசமைப்பு உருவாக்கம் விரைவாக நடப்பது அவசியம்!

கரு ஜயசூரிய வலியுறுத்துகின்றார்



கொழும்பு, மார்ச் 24
இனங்களுக்கிடையிலான நம்பிக்கை யின்மை விரைவில் களையப்படவேண் டும். புதிய அரசியலமைப்பை விரைவில் இயற்றுவதற்குரிய நடவடிக்கை முன்னெ டுக்கப்படவேண்டும் என்று முன்னாள் சபா நாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார். டி.எஸ். சேனாநாயக்கவின் 73 ஆவது நினைவு தின

11

## ஏ.ரி.எம். அட்டையைத் திருடி மதுபானம் கொள்வனவு

பெண் உட்பட நால்வர் மறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 24
வீடான்றில் இருந்து 95 ஆயிரம் ரூபா மற்றும் தன் னியக்க பணப்பரிமாற்ற அட்டை என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் பெண் உட்பட நால்வர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ள னர். அவர்களை எதிர்வ ரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது.

11

## அரச சொத்துகளை மீட்க விரைவில் புதிதாகச் சட்டம்!

கொழும்பு, மார்ச் 24
கடந்தகாலங்களில் ஆட்சி யில் இருந்த அரசாங்கங்க ளின் கீழ் சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்ட அரச சொத்துகளை மீட்பதற் கான சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப் பிக்கத் திட்டமிடப்பட்டுள் ளது என்று தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு

11



**பூச்சந்தி பூராளி**

**'மாற்றம் மாற்றம் எண்டு புத்தரையும் ஊழல்வாதியா மாத்திப்போட்டினம் கண்டியளோ'**

இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில்

## படுகொலையான இருவரின் உடல்கள் 38 ஆண்டுகளின் பின் தீயுடன் சங்கமம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
1987ஆம் ஆண்டு இந்திய இரா ணுவத்தால் கொல்லப்பட்ட தாயின தும், அவரது மகனினதும் உடல் வீட்டுக்குள் அடக்கம் செய்யப்பட்டி ருந்த நிலையில், அந்த உடல்கள் நீதிமன்ற அனுமதிபெற்று மீள எடுக்கப்பட்டு நேற்று சமய முறைப் படி தகனக்கிரியைகள் நடத்தப்பட் டுள்ளன. 1987ஆம் ஆண்டு இந்திய இரா ணுவம் யாழ்ப்பாணம் நோக்கி மேற்கொண்ட படை நடவடிக்கை கயில், கண்டி வீதியில் வீடொன்றில் இருந்த

11

## வாக்குச்சீட்டு அச்சிடும் பணி ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 24
உள்ளூராட்சி சபைத் தேர் தலுக்கான வாக்குச்சீட் டுகளை அச்சிடும் பணி கள் நேற்றுமுதல் ஆரம் பிக்கப்பட்டுள் ளன என்று

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 23.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4026 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 38 55 61 71 |
| விசேட எழுத்து | P |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 23.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1093 |
| வெற்றி இலக்கிலம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 13 32 38 42 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 23.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 052 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 4 8 4 3 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 23.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2132 |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 04 57 59 74 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 23.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5784 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 6 4 8 6 6 0 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 23.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1814 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 09 32 74 79 |
| விசேட எழுத்து | T |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 23.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0359 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 8 6 6 0 |

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 23.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0492 | S | 8 2 7 4 4 6 |

**Super Ball DLB**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 23.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | 2758 | E | 13 43 49 52 |

**சனிதா DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 23.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | P | 03 05 22 30 | 4919 |

**SASIRI DLB**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 23.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0649 | 02 11 12 |

**லக்ன ராசி DLB**

| திகதி | தினம் | சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 23.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | | 05 19 26 32 | 4470 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 23.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | C | 39 | 09 33 40 45 | 1934 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 23.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | K | 14 23 30 32 | 2584 |

### ஐரோப்பிய ஒன்றியத்தின்

# ஜி.எஸ்.பி. சிறப்புக் குழுவினர் இலங்கையில் கண்காணிப்பு

கொழும்பு, மார்ச் 24

**ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. கண்காணிப்புக்குழுவினர் ஏப்ரல் மாதம் மத்திய பகுதியில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இதன்படி, ஏப்ரல் மாதம் 15ஆம் திகதியளவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஜி.எஸ்.பி. கண்காணிப்புக்குழுவினர், சுமார் ஒருவாரகாலம் இலங்கையில் தங்கியிருந்து பல்வேறு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளையும் அந்தக் குழுவினர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

ஜி.எஸ்.பி. கண்காணிப்புக்குழுவினருக்கு, பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் கொண்டுவரப்படவுள்ள திருத்தங்கள் குறித்த தெளிவுபடுத்தல்களை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அதிகாரிகள் ஆகியோரையும் ஜி.எஸ்.பி. கண்காணிப்புக்குழுவினர் சந்தித்து கலந்துரையாடல் நடத்துவார்கள் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-இ)

## அரிசிக்கு மீண்டும் தட்டுப்பாடு?

கொழும்பு, மார்ச் 24

நாடு முழுவதும் சுமார் 7 மாதங்களுக்கு கடுமையான அரிசிப்பற்றாக்குறை ஏற்படும் எனத் தேசிய விவசாயிகள் ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

2024/2025 ஆம் ஆண்டு பெரும்போகப் பருவத்தில், இரு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இது அரிசிப்பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக அமையலாம்.

வெள்ளத்தால் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பல பகுதிகளில் குறைந்தபட்சம் 20 வீதம் வரை எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை.

அரிசிப்பற்றாக்குறையைச் சமாளிக்க, அடுத்த பருவத்தில் குறைந்தபட்சம் 7 இலட்சம் ஹெக்ரேயர் பரப்பளவில் நெல் பயிரிடல் மேற்கொள்ளப்படவேண்டும்.

நாட்டின் அரிசிக் களஞ்சியம் குறையுமாயின் நாடு கடுமையான அரிசிப்பற்றாக்குறையை சந்திக்கநேரிடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (ச-இ)

## தொடர்ச்சியாக ஏமாற்றுகிறது தேசிய மக்கள் சக்தி அரசு!

### சுதந்திரக்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றிவருகின்றது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் காலத்தில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கியே இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தது. ஆதலால், தமது வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாமல் இன்று பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. பொய்யான வாக்குறுதிகளால் ஆட்சியைத் தக்கவைக்கமுடியாது என்பதை அரசாங்கம் தற்போது உணர்ந்துள்ளது. 'நாடு அநுரவோடு' என்று கூறிய பட்டதாரிகளும் இளைஞர்களும் இன்று வேலைவாய்ப்புகளைக் கோரி வீதிக்கு இறங்கியுள்ளனர். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் தாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை மக்கள் தற்போது உணர்ந்திருக்கின்றனர் - என்றார். (ம)

### ஊர்காவற்றுறையில்

## சிறுவர், பெண்கள் பிரிவின்றி முறைப்பாடளிப்பதில் சிரமம்!

யாழ்ப்பாணம், மார்ச் 24

9 வருடங்களாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் சிறுவர் பெண்கள் பிரிவு இயங்கவில்லை. பொதுவான முறைப்பாடுகளை ஏற்கும் பகுதியிலேயே முறைப்பாடு ஏற்கப்படுவதால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்போது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை யாழ்.மாவட்டச் செயலர் தொடர்புகொண்டு இதுதொடர்பில் வினவியபோது,

சாவகச்சேரிப் பகுதியில் சிறுவர் பெண்கள் தொடர்பில் முறைப்பாடுகள் அதிகரித்த நிலையில் ஊர்காவற்றுறையில் பணியாற்றிய பெண் பொலிஸ் உத்தியோகத்தர் அங்கு இடமாற்றம் செய்யப்பட்டார். எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல்வார இறுதியில் குறித்த பிரிவை ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ச-25,125)

## தேசபந்துவைப் பணிநீக்க அரசாங்கம் நடவடிக்கை!

### எதிர்க்கட்சி ஆதரவு

கொழும்பு, மார்ச் 24

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைப் பதவிநீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளது எனத் தெரியவருகின்றது.

பொலிஸ்மா அதிபர் தாமாக பதவி விலகிச் செல்ல மறுத்தால், நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றி அவரை வெளியேற்றுவதற்கு ஆளுங்கட்சி தயாராகிவருகின்றது.

மாத்தறை, வெலிகம துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்த பின்னர் இந்த விடயம் தொடர்பான நகர்வுகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவிநீக்கம் செய்வதற்குரிய பிரேரணை முன்வைக்கப்படும் பட்சத்தில் அதற்கு ஆதரவளிக்கப்படும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அதற்குரிய பிரேரணையை விரைவில் முன்வைக்குமாறு எமது நாட்டுக்கு தகுதியான நிரந்த பொலிஸ்மா அதிபரொருவர் அவசியம் என்றும் ஐ.ம.ச. மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வைத்தியர்களையும் அரசசேவையில் உள்ளீர்க்க

## அரச வேலையற்ற சித்த வைத்தியர் சங்கம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மார்ச் 24**

**அரச வேலையற்ற ஆயிரத்து 689 சித்த, ஆயுள்வேத மற்றும் யுனானி வைத்தியர்கள் சுகாதார அமைப்பில் பணியாற்றுவதற்கான வாய்ப்புக்காக ஏழு ஆண்டுகளுக்கும் மேலாகக் காத்திருக்கின்றனர். ஏழு ஆண்டுகளுக்கும் மேலாகக் காத்திருக்கும் அரச வேலையற்ற சித்த வைத்தியர்களை உடன்சேவைக்குள் உள்ளீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச வேலையற்ற சித்த வைத்தியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் அரச வேலையற்ற சித்த வைத்தியர் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதிர்வரும் காலங்களில் வெளியாகவுள்ள புதிய மருத்துவர்களைக் குடும்ப மருத்துவர்களாக நியமிக்க அரசு தயாராகிவருகின்றது.

மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நிபுணர்களாகச் சுகாதார சேவைக்கு பங்களிக்கும் அதே வாய்ப்பையே நாங்கள் கேட்கிறோம்.

எங்கள் சேவைகள் நாட்டின் வருவாயை அதிகரிக்க உதவும். சுதேச வைத்தியர்களாகிய நாங்களும் நியாயமாக நடத்தப்படுவதற்கும், அதே போன்று சேவை செய்வதற்கான வாய்ப்புகளைப் பெறுவதற்கும் தகுதியானவர்கள். எமக்கான நியாயத்தையே நாம் கேட்கிறோம்.

ஏற்கனவே உள்ளகப் பயிற்சியை முடித்த ஆயிரத்து 689 ஆயுள்வேதம், சித்த மற்றும் யுனானி வேலையற்ற வைத்தியர்களுக்கு உடனடி நியமனங்களை வழங்கவேண்டும்.

வேலையற்ற சுதேச வைத்தியர்களாகிய எம்மை அரசாங்கம் புறக்கணிக்கக்கூடாது- என்றுள்ளது. (ச-66)



# வடமராட்சியில் நேற்றும் பெருந்தொகை கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச். 24

வடமராட்சி மருதங்கேணிப் பகுதியில் பெருமளவான கேரளக் கஞ்சா நேற்றும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மருதங்கேணிப் பொலிஸாருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில், இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட சுமார் 85 கிலோகிராம் கேரளக் கஞ்சா அடங்கிய 40 பொதிகள் ஆழியவளை கடற்கரையில் கைப்பற்றப்பட்டன. இதன் மதிப்பு சுமார் 17 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை நேற்றுமுன்தினம் தும்பளை மூர்க்கம் பகுதியில் 300 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-27-26,100)

மன்னார் டிப்பர் விபத்து

# போதைச் சாரத்தியமே விபத்துக்குக் காரணம்

மன்னார், மார்ச் 24

மன்னார் பள்ளமடு- பெரியமடு பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற டிப்பர் விபத்தில் டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சாரதி மதுபோதையில் டிப்பரைச் செலுத்தியுள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த விபத்து சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-56)

# பாலியல் சேஷ்டை;

## நீதிமன்ற அலுவலர் கைது



யாழ்ப்பாணத்திலிலுள்ள நீதிமன்றமொன்ன்றில் சக உத்தியோகத்தரிடம் பாலியல் சேஷ்டையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நீதிமன்ற அலுவலர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த பெண் உத்தியோகத்தர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

# கஞ்சாவுடன் ஒருவர் இரணைமடுவில் கைது

கிளிநொச்சி, மார்ச் 24

இரணைமடுப் பகுதியில் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிராம் 680 மில்லிக்கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-28,20)

# கிளிநொச்சியில்

# ஹெரோய்ன், ஐஸுடன் மூவர் வீடொன்றில் கைது

கிளிநொச்சி, மார்ச் 24

கிளிநொச்சி - பரந்தன் குமரபுரம் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் சந்தேகநபர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் நான்கு கையடக்கத் தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22-113,28)




**வடமராட்சி கிழக்கில ஓ.எல். சோதினை நடக்கிற மண்டபம் ஒண்டில எக்ஸாம் எழுதவாற பெடியளுக்குப் பயத்தில, அங்க டியூட்டியில நிக்கிறவை பொலிஸ் பாதுகாப்புக் கேட்டதை செய்தியளில வாசிச்சிருப்பியள். அந்தளவுக்கு பெடியளின்ர அட்டகாசம் கூடிப்போட்டுது.**

**அந்தச் சோதினை மண்டபத்தில ரண்டு பள்ளிக்கூடங்களில படிக்கிறவைக்கு ஓ.எல். சோதினை நடக்குது. விடியவே அந்தச் சோதினை மண்டபத்துக்கு வந்த ஒரு பெடிப்பிள்ளை, பின்பக்கமாப் போய் பீடி வைச்சு இழுத்துப்போட்டு, மற்றப் பள்ளிக்கூடப் பெடியன்ர முகத்தில புகையை ஊதியிருக்கிறார். இப்பிடி விடுகாலித்தனமா புகையை முகத்தில ஊதினால் ஆருக்கும் கோபம் வரத்தானே செய்யும்? மற்றப் பள்ளிக்கூடப்பெடியன் பீடியைப் பத்தினவருக்கு நாலு சாத்துச் சாத்திப்போட்டு சோதினை எழுத உள்ளுக்க போட்டான். ஆனால் பீடிகுடிச்ச பெடிப்பிள்ளை, ஆரிட்டையோ அதுக்குள்ள போனை வாங்கி தன்ர 'செற்றுக்கு' தனக்கு அடிவிழுந்த கதையைச் சொல்லிப்போட்டார்.**

**சோதினையில முதலாம் பகுதி முடிய, எக்ஸாம் எழுதினவை எல்லாரும் வெளியால வந்திருக்கினம். அதுவரைக்கும் வெளியால காத்திருந்த பீடிகுடிச்ச பெடியன்ர ஆக்கள், அப்பிடியே உள்ளுக்க பாய்ஞ்சுபோய் மற்றப்பள்ளிக்கூடப் பெடியனை போட்டு வெளுத்திருக்கிறாங்கள். அங்க சோதினைக்கு மேற்பார்வைக்கு வந்தவை எல்லாரும் மறிக்க மறிக்க அந்தப் பெடியனுக்கு இந்தக் கும்பல் அடிச்சிருக்கு. ஒரு கட்டத்தில அந்த மேற்பார்வை டியூட்டிக்கு வந்தவையோடையும் அந்த அடிபாட்டுக் கும்பல் மிண்ட வெளிக்கிட்டிருக்கு. பிறகு பொலிஸூக்கு போன் பண்ணத்தான் ஒரு மாதிரி விட்டிட்டுப்போயிருக்கினம். அப்பிடி பிறகும் உப்பிடியான அடிபாட்டுக்கும்பல் அத்துமீறிவந்து சண்டித்தனம் காட்டினால் என்ன செய்யிறது எண்ட முன்னெச்சரிக்கையாத்தான் எக்ஸாம் டியூட்டிக்கு வந்தவை பொலிஸிட்ட பாதுகாப்புக் கேட்டவை. இப்ப அங்க பொலிஸ் பாதுகாப்போடதான் எக்ஸாம் நடக்குது. எப்பிடி இருந்த யாழ்ப்பாணம் இப்பிடி பாழ்ப்பாணமா மாறிக்கொண்டிருக்கு பாருங்கோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும்.

**இடபம்:** சிலருக்கு திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் பொறுமை அவசியம். செரிமானப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. சிலருக்குப் பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** எந்த ஒரு முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும்.

**கடகம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவுசெய்ய நேரிடும் என்பதால், கையிருப்புக் கரையும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும்.

**சிம்மம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். பிள்ளைகளால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். வெளியிடங்களில் உணவு விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** அன்றாடப் பணிகளிலும்கூட கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும். கணவன் மனைவிக்கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**துலாம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் திடீர்ச்செலவுகள் ஏற்படும்.


**விருச்சிகம் :** உற்சாகமான நாள். சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத் துணை உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும்.

**மீனம்:** உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்வது நல்லது.



# மும்பையை வீழ்த்தியது சென்னை

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடந்த மும்பைக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.**

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற 3 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மும்பை இந்தியன்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரோஹித் சர்மா ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். ஒருகட்டத்தில் 36 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து மும்பை இந்தியன்ஸ் அணி தடுமாறியபோதும் பின்னர் ஒருவாறு சுதாரித்துக் கொண்டது. 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது மும்பை இந்தியன்ஸ் அணி.

சென்னை அணி சார்பாக நூர் அகமது 4 விக்கெட்டுகளையும், கலீல் அகமது 3 விக்கெட்டுக்களையும், நாதன் எல்லிஸ் மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

155 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட ஆரம்பித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிதானமாக விளையாடியது. ரச்சின் ரவீந்திராவும், அணித்தலைவர் ருதுராஜ் கெய்க்வாட்டும் அரைச்சதம் கடந்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய ரச்சின் ரவீந்திரா 45 பந்துகளில் 65 ஓட்டங்களை எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காது இருந்தார். ருதுராஜ் கெய்க்வாட் 26 பந்துகளில் 53 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

19.1 பந்துப்பரிமாற்றங்களில் சென்னை சுப்பர் கிங்ஸ் 158 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது. (ஏ)

# இஷான் கிஷானின் அபார சதத்தால் ராஜஸ்தானை வீழ்த்தியது ஹைதராபாத்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சன்ரைசஸ் ஹைதராபாத் அணி 44 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஹைதராபாத் நகரில் உள்ள ராஜிவ் காந்தி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சன்ரைசஸ் ஹைதராபாத் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.



முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசஸ் ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக இஷான் கிஷான் 45 பந்துகளில் சதம் கடந்து அசத்தினார். இறுதி வரை ஆட்டமிழக்காது ஆடிய அவர் 11 பவுண்டரி மற்றும் 6 சிக்ஸர்கள் அடங்கலாக 106 ஓட்டங்களை அணிக்குப் பெற்றுக்கொடுத்தார்.

287 என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 விக்கட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் சைன்ரைசஸ் ஹைதராபாத் அணி 44 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (ஏ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## புத்தரிடமா சொல்லியழமுடியும்?

தையிட்டி திஸ்ஸவிகாரை மீண்டும் பேசுபொருளாகியிருக்கிறது. சொல்வதொன்று, செய்வதொன்று என்பதாக முன்னைய ஆட்சியாளர்கள் பின்பற்றிய அதே தவறானவழியையே தேசிய மக்கள் சக்தியினரும் தொடரப்போகின்றனர் என்பதையே, திஸ்ஸ விகாரைப் பகுதியில் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்ட நிகழ்வு உணர்த்துகின்றது. நல்லிணக்கத்தின் தடைப்புள்ளியாக இருக்கும் இந்தச் சட்டவிரோத விகாரை பற்றிப் பலமுறை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் எடுத்துக்கூறப்பட்டிருந்தது. நாடாளுமன்றத்திலும் பலமுறை இதுதொடர்பில் ஆதாரங்களுடன் கருத்துகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பூரணை நாளிலும் அங்கு ஆர்ப்பாட்டங்களும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமரிடமும் இது தொடர்பில் மக்களால் நேரடியாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. இப்படியெல்லாம் பல வழிகளிலும் தமிழ்த் தரப்புகளும்,மக்களும் திஸ்ஸவிகாரையை அகற்றுவதோடு, அது அமைக்கப்பட்டிருக்கும் தங்களுக்குச் சொந்தமான நிலத்தையும் கையளிக்குமாறு கொடுத்த அழுத்தங்களால் அரசாங்கம் கொஞ்சம் கீழிறங்கி வருவது போல காட்டிக்கொண்டது.

'வலிகாமம் வடக்குப்பகுதியில் திஸ்ஸவிகாரை என்ற பெயரோடு 3 விகாரைகள் காணப்படுகின்றன. இதில் தையிட்டி திஸ்ஸவிகாரைக் காணியை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைகள் தோற்றம்பெற்றுள்ளன. வடக்கில் நிலவும் இவ்வாறான பிரச்சினைக்கு நல்லிணக்கத்துடனும், பொறுமையுடனும் தீர்வுகாணவேண்டும். தமிழ் மக்களை வெறுப்புணர்வுடன் பார்க்கவேண்டிய தேவை எமக்குக் கிடையாது' என்று புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி இம்மாதம் 18 ஆம் திகதி நாடாளுமன்றில் வைத்து உறுதிமொழி வழங்கினார். ஆனால் வெறும் ஐந்து நாள்களுக்குள் அவர் வழங்கிய அந்த உறுதிமொழி காற்றில் பறக்கவிடப்பட்டிருக்கிறது. திஸ்ஸ விகாரைக்கும் மேலதிகமாக அங்கு எவ்வித அனுமதியும் பெறப்படாமல் அமைக்கப்பட்ட சட்டவிரோதக் கட்டடம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் எதிர்ப்பை ஒரு பொருட்டாக மதிக்காமல், சிங்களபௌத்த சிந்தனைகளுக்கும், அதன்நலன்களுக்குமே முதன்மையிடம் கொடுப்போம் என்பதைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இன்னொருமுறை இதன்மூலம் நிரூபித்திருக்கிறது.

இன, மத உணர்வு காரணமாக இந்தச் சட்டவிரோத விகாரை தொடர்பில் தேசிய மக்கள் சக்தி ஒருதலைப்பட்சமான முடிவை எடுத்திருக்கலாம். ஆனால் அந்த அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையான ஊழல், மோசடியற்ற நாடு என்பதுவும் திஸ்ஸவிகாரை விவகாரத்தில் குழிதோண்டிப்புதைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால்இந்தச்சட்ட விரோத விகாரை, மகாவம்சத்தில் கூறப்படும் திஸ்ஸவிகாரை இருந்ததாகச் சொல்லப்படும் நிலத்தில் அமையவில்லை, தமிழ்மக்களின்தனிப்பட்ட காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டே இந்த விகாரை எவ்வித அனுமதியுமில்லாமல் கட்டப்பட்டுள்ளது. அத்தோடு திஸ்ஸ விகாரை என்ற பெயரில் வலி.வடக்கில் மூன்று விகாரைகள் இருப்பதால்,இதில் எது உண்மையான திஸ்ஸவிகாரை என்ற குழப்பமே இன்னும் தீரவில்லை. அதைவிட இப்போது சர்ச்சைக்குள்ளான தையிட்டி திஸ்ஸ விகாரையை கட்டக்கூடாது என்று மாவட்ட, பிரதேசஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களிலும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அவற்றைக்கூட மதிக்காமல் கட்டப்பட்ட இந்த விகாரையும், அதன் கூட அமையப்பெற்ற கட்டடங்களும் ஊழலின் அடையாளங்களே. அந்த ஊழல் அடையாளங்களைத்தான் தன் படைகள் மூலம் காவல் காத்து, விஸ்தரித்துக்கொண்டிருக்கிறது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். ஊழல் என்பது தனியே பணத்தையும் பொருள்களையும் கையாடுதல் மட்டுமல்ல, இதுபோன்ற சட்டவிரோதமான எல்லாச் செயல்களும் ஊழல்களே. அந்த ஊழல்களை அழிப்போம் என்றவர்களே இப்போது அவற்றுக்கு ஊதுகுழல்களாக மாறிநிற்கும் அவலத்தை நாம் புத்தரிடமா சொல்லியழமுடியும்?



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




நாளொரு நல்வார்த்தை

உங்களின் தோல்வி எங்கே ஒளிந்துள்ளது தெரியுமா? பிரச்சினைகள் வரும்போது அல்ல; பிரச்சினைகளைக் கண்டு நீங்கள் பயந்து விலகும்போது.

– பாரதியார்–




## வெளிவிவகார அமைச்சர் அமெரிக்காவுக்குப் பயணம்



கொழும்பு, மார்ச் 24

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார் என வெளிவிவகாரத்துறை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவுக்குச் செல்லும் அவர், அமெரிக்காவின் வெளிவிவகாரத்துறை செயலர் ரூபியோ உள்ளிட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார். எனினும், அமெரிக்க அதிபர் ட்ரம்பைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபடுவாரா இல்லையா என்பது தொடர்பில் எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

அமைச்சர் விஜித ஹேரத்தின் அமெரிக்கப் பயணத்தின்போது முதலீடுகள், பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. பல நாடுகளுக்கும் அமெரிக்கா வரிகளை அதிகரித்துவரும் நிலையில், விஜித ஹேரத் அமெரிக்காவுக்குச் செல்கின்றமை முக்கியத்துவம் மிக்கதான விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் மோடி ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இவ்வாறான நெருக்கடியான பயண அட்டவணைக்கு மத்தியிலேயே வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அமெரிக்காவுக்குச் செல்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (மஇ)

## தேசபந்துவுக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 24

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு விசேட பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர் தற்போது பல்லேகலை, தும்பர சிறைச்சாலையில் உள்ள ஒரு பாதுகாப்பான அறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில் இவ்வாறு விசேட பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## கையூட்டுப் பெற்ற மூவர் கைது

கொழும்பு, மார்ச் 24

5 இலட்சம் ரூபாவை இலஞ்சமாகப் பெற முயன்ற வர்த்தகர் மற்றும் அரசசார்பற்ற நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் உட்பட மூன்று சந்தேகநபர்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி, பணாமுர பகுதியைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் செய்த முறைப்பாட்டில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## அமெ. ஈரான் மோதல் இலங்கையைப் பாதிக்கும்

கொழும்பு, மார்ச் 24

ஈரான் மீது அமெரிக்கா செலுத்தும் கடுமையான அழுத்தம் காரணமாக உலக சந்தையில் எரிபொருள் விலை வேகமாக உயர்ந்துவருகின்றன.

இந்த நிலையில் இது இலங்கையிலும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்துக்குக் கப்பல்

கொழும்பு, மார்ச் 24

தலைமன்னாருக்கு மீண்டும் கப்பற் போக்குவரத்தைத் தொடங்குவதற்கான பணிகள் இராமேஸ்வரத்தில் ஆரம்பமாகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையிலுள்ள தலைமன்னாருக்கு, தனுஷ்கோடியிலிருந்து 1914ஆம் ஆண்டு பயணிகள் கப்பற் போக்குவரத்து தொடங்கப்பட்டது. இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரினால் இந்தக் கப்பல் சேவை 1981ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

இந்தநிலையில் இராமேஸ்வரம் - தலைமன்னாருக்கும் இடையில் மீண்டும் கப்பற் போக்குவரத்தை ஏற்படுத்த இராமேஸ்வரத்தில் கட்டுமானப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை

செவ்வாய்க்கிழமை - பங்குனி - 11

25.03.2025

சுபநேரம் : 10.45 - 12.15

ராகுகாலம் : 03.15 - 04.45


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2025 – 2027

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2025 ஆம் ஆண்டில் சனிப்பெயர்ச்சியானது 2025 மார்ச் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மீனராசிக்கு வரும் சனிபகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருடகாலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம்செய்து அருளாசி வழங்குவார்.



**வெள்ளைமனம் கொண்டு எளிதில் யாரையும் எதிலும் நம்பிவிடும் பழக்கம் உடைய துலாம் ராசியினரே**

## துலாம்



இதுவரை உங்களது பஞ்சமபூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருக்கும் சனிபகவான் விலகி ரண ருண ரோகஸ்தானத்துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் அஷ்டம ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் அயன சயன போக ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் தைரிய வீரியஸ்தானத்தையும் பார்க்கிறார். இனி சனிபகவான் தைரிய வீர்ய ராசியில் சஞ்சரிக்கிறார்.

பொதுவாக சனிபகவான் மூன்றாம் ராசியில் சஞ்சரிப்பது சிறப்பு என்பதே பொதுவிதி. அதுவே இதில் கவனிக்கவேண்டிய மிக முக்கிய விஷயம், இதனால் உங்களுக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக்கும். வெளிநாடுகளுக்குச் சென்றுவரும் யோகம் உண்டாகும். பிறரின் முகபாவனைகளைக் கண்டே அவர்களின் மனதை அறிந்துகொள்வீர்கள். தெய்வ வழிபாடுகளில் ஈடுபடுவீர்கள். ஆன்மீகப் பெரியோர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். சமுதாயத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

அதேநேரம் இக்கட்டான சூழ்நிலைகளில் உணர்ச்சி வசப்படாமல் பொறுமைகாக்கவும். வேகத்துடன் விவேகத்தையும் கூட்டிக்கொண்டால் உங்கள் செயல்கள் அனைத்தும் திட்டமிட்டபடி குறிக்கோள்களை எட்டும். ஏமாற்றங்களிலிருந்து தப்பிப்பீர்கள். புதிய முதலீடுகளில் ஈடுபட்டு வருங்காலத்தை வளமாக்கிக்கொள்வீர்கள். வருமானம் குவியும். உங்கள் புகழும், கௌரவமும் உயரும். இதுநாள்வரை தேவையற்ற வீண்பழிசுமந்த நீங்கள், அவற்றிலிருந்து விடுபடுவீர்கள். உங்களின் முயற்சிகள் பலமடங்காக உயர்ந்து, அதற்கேற்ற வெற்றிகிடைக்கும்.

உங்களின் ஆளுமைத்திறன் அதிகரிக்கும். திட்டமிட்ட செயல்கள் துரிதமாக நடக்கும். குடும்பத்தில் அரங்கேறும் சுபநிகழ்ச்சிகளால் சந்தோஷம் அடைவீர்கள். உங்கள் பேச்சில் அவ்வப்போது ஆணவம் தலைதூக்க நேரலாம். கவனத்துடன் அதைத் தவிர்த்துக்கொள்ளவும். உங்களின் பேச்சாற்றல் அதிகரிக்கும். தன்னம்பிக்கை உயரும். உங்களின் எண்ணங்களை அடுத்தவர்கள் நல்லமுறையில் புரிந்துகொள்வார்கள். புதிய பொறுப்புகள் தாமாகவே தேடிவரும். வருமானம் நல்ல முறையில் வந்தாலும், சிலருக்கு குறுக்குவழியில் செல்ல மனம் நினைக்கும். எனவே மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு நேர்வழியில் செல்லவும். இதன்மூலம் பல பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கலாம்.

**உத்தியோகஸ்தர்களுக்கு:** மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் நல்லமுறையில் இருக்கும். இதனால் மனதில் புத்துணர்ச்சி அதிகரிக்கும். உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சிலர் நெடுநாளாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வைப் பெறுவார்கள்.

**வியாபாரிகள்:** பொறுமையுடன் செயற்பட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். வருமானம் சிறப்பாகவே தொடரும். அதேசமயம் கூட்டாளிகளிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும். புதிய முதலீடுகளில் நன்றாகச் சிந்தித்த பிறகே ஈடுபடவும்.

**பெண்களுக்கு:** குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்களை அனுகிப் பயன்பெறுவார்கள். சேமிப்பில் நல்ல கவனம் செலுத்துவீர்கள். ஆலயங்களுக்குச் சென்று ஆன்மீக பலம் பெறுவீர்கள். மற்றபடி அனைவரிடமும் விட்டுக் கொடுத்து நடந்துகொண்டு குழப்பங்களைத் தவிர்க்கவும்.

**மாணவர்களுக்கு:** நினைவாற்றல் பெருகும். இதனால் தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். உபரி நேரங்களில் மனதிற்குப் பிடித்த கேளிக்கைகளிலும், விளையாட்டுகளிலும் ஈடுபட்டு மகிழ்ச்சிக் கடலில் திளைப்பீர்கள். அதேநேரம் நண்பர்களிடம் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுங்கள்.

**சித்திரை:** சாதுர்யமான பேச்சின்மூலம் காரிய வெற்றிகிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். பணவரத்து திருப்தி தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமாக உழைக்கவேண்டி இருக்கும். அதன்மூலம் நல்ல பலன்கள் கிடைக்கப்பெறுவீர்கள். உத்தியோகம் தொடர்பான இடமாற்றம் ஏற்படலாம். குடும்பத்தில் இருப்பவர்கள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது.

**சுவாதி:** கணவன், மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச்செல்வது நல்லது. குழந்தைகளின் முன்னேற்றத்தில் அக்கறைகாட்டுவீர்கள். சாதூரியமான பேச்சின்மூலம் காரிய வெற்றி உண்டாகும்.

**விசாகம் 1, 2, 3ஆம் பாதம்:** பயணங்களின் போது கவனம்தேவை. வெற்றிபெற கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உங்களது நடவடிக்கைகள் மேலிடத்திற்கு திருப்தியைத்தரும். உடல் ஆரோக்கியம் பெறும். மாணவர்கள் மற்றவர்களை திருப்தியடையச்செய்யும் வகையில் செயற்படுவர்.



# புகழ்பெற்ற விஞ்ஞான ஆசான்கள் யாழ்ப்பாணத்தில் இன்றில்லை

## சந்திரிகா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24
விஞ்ஞானம் கற்பிப்பதற்கு யாழ்ப்பாணத்தில்தான் சிறந்த ஆசனான்கள் இருந்தனர். போரால் அவர்கள் வெளியேறிவிட்டதால் தற்போது விஞ்ஞானம் கற்பிப்பதற்கு எவரும் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
வடக்கில் விஞ்ஞானபாட ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. யாழ்ப்பாணத்தில்தான் உலக புகழ்பெற்ற சிறந்த விஞ்ஞானபாட ஆசிரியர்கள் இருந்தனர். இன்று இல்லை. இருந்தவர்கள் போரால் வெளியேறிவிட்டனர். எஞ்சியோர் புலிகள் அமைப்புடன் இணைந்து உயிரிழந்தனர். அதன்பின்னர் அரசாங்கங்களால் நியமனம் வழங்கப்படவில்லை. நவீன கல்வி முறைமை இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. நாட்டைக் கட்டியெழுப்புவோம் எனக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்களாவது கல்வித்துறையில் மறுசீரமைப்பை ஏற்படுத்தவேண்டும்- என்றார். (ச-44)

# அதானி திட்டத்தை கைவிட்டமை தவறு

## ரணில் வருத்தம்

கொழும்பு, மார்ச் 24
மன்னாரில் அதானி நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கத் தவறியது வருத்தமளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமை எதிர்காலத்தில் பெரிய அளவிலான முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒரு தடையாக இருக்கும். எமது அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளைத் தொடருமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை வைப்பதாகவும் அவர் கூறினார். இந்தியப் பெருங்கடலை மையமாகக்கொண்ட ஆசியாவை நோக்கி உலகளாவிய சக்தி மாற்றம் ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய ரணில் விக்கிரமசிங்க, இலங்கை அதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

# வெளியேறுகின்றனர் தொழில் நிபுணர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 24
தொழில்வாண்மையாளர்கள் மீண்டும் நாட்டைவிட்டு வெளியேறத்தொடங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பயிற்சியைப் பூர்த்திசெய்த 2,000 மருத்துவர்கள், 4 ஆயிரம் தாதியர்கள், 2 ஆயிரம் பொறியியலாளர்கள் தற்போது வெளிநாட்டுக்குச் செல்லத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறார்கள்.

அதேவேளை நாட்டில் மருத்துவர்களுக்கும் தாதியர்களுக்கும் கடுமையான பற்றாக்குறை நிலவுவதாகவும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சுகாதார அமைச்சு எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் தொழிற்சங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோ.சைக்கிள் பாவனையில் யாழில் பெண்களே அதிகம்

மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஏனைய மாவட்டங்களைவிட யாழ்.மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள் பயன்படுத்துவோரில் பெண்களே அதிகமாகக் காணப்படுகின்றனர் என்று யாழ். மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர்தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டச் செயலகப் பெண் உத்தியோகத்தர்களுக்கான மோட்டார் சைக்கிள் பழுதுபார்க்கும் பயிற்சி நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய காலகட்டத்தில் பெண்களின் வளர்ச்சியில் பாரிய பங்காற்றுவதில் மோட்டார்ச் சைக்கிள் முக்கியமானதொன்றாக மாறிவிட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-66)

# வடக்கு – கிழக்கு அபிவிருத்தியில் முழுமையான திட்டமிடல் அவசியம்

கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 24

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதென்றால் ஆகக் குறைந்தது அங்கு தேவைகளைக் கண்டறியக் கூடிய முழுமையான ஆய்வுகளைச் செய்த பின்னரே நிதி ஒதுக்கீட்டைச் செய்யவேண்டும். அதைவிடுத்து அரசாங்கமே முடிவுகளை எடுப்பதால் உண்மையான அபிவிருத்தியை எட்டமுடியாது.இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள 500 மில்லியன் ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டை எவ்வாறு செலவு செய்யவேண்டும் என்று கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரன் யோசனை கோரியிருந்தார்.

ஆனால் இதுவல்ல முறை. போரால் பாதிக்கப்பட்டு 35 வருடங்களுக்குப் பின்னால் உள்ள பிரதேசத்தில், மக்களின் பொருளாதாரம் பலவீனமாக இருக்கும் இடத்தில் முழுமையான திட்டமிடல் ஒன்று இருக்கவேண்டியது அவசியமாகும். அதன்படி ஆராய்ந்து நிதி ஒதுக்கப்படவேண்டும்.

கிடைக்கும் நிதியை எப்படிப் பயன்படுத்தப்போகின்றோம் என்று மக்களுக்கு படம்காட்டும் வகையில் கூறி மக்களை ஏதோவொரு வகையில் சமாளித்து மிகப்பெரிய நிதியை வேறுவேறு இடங்களுக்குக் கொண்டுசெல்லும் நிலையே தோற்றுவிக்கப்படுகின்றது. இது பொருளாதாரத்தைப் பாதுகாத்து பலப்படுத்தும் முயற்சியாக இருக்கப்போவதில்லை - என்றார். (ச-இ)



# இப்தார் நிகழ்வு !

கொழும்பு, மார்ச் 24

பல்பண்பாட்டு பரிணாமங்களைப் பகிர்ந்துகொள்ளும் முகமாக மதத்தலைவர்கள் மற்றும் நலன்விரும்பிகளுடன் ஏற்பாடுசெய்யப்பட்ட இப்தார் விசேட நிகழ்வு பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பற்றிக் தலைமையில் பிரித்தானியத் தூதரகத்தில் கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. (ச-22,125)



# கரைச்சிப் பிரதேசத்தில் உதைபந்தாட்டப்போட்டி

கிளிநொச்சி, மார்ச் 24

கரைச்சிப் பிரதேச செயலக விளையாட்டுக்கழகங்களுக்கான உதைபந்தாட்டப்போட்டி கிளிநொச்சியிலுள்ள வடக்கு மாகாண விளையாட்டுக் கட்டடத்தொகுதியின் மைதானத்தில் ஆரம்பமானது.

மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கலந்துகொண்டு குறித்த போட்டியை ஆரம்பித்துவைத்தார்.

14 கழகங்கள் பங்குகொள்கின்ற இந்தப் போட்டியின் இறுதிப்போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ச-41-113)

# சீனச் சொக்லேட் விற்பனை தண்டம் 64, 000

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட சீனச் சொக்லேட் வகைகளை யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு வைத்திருந்த கடை உரிமையாளருக்கு 64 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட மானிப்பாய் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கி. அஜந்தன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது உரிய சுட்டுத் துண்டுகளின்றி விற்பனை செய்யப்பட்ட குறித்த சீனச் சொக்லேட் வகைகள் கண்டறியப்பட்டன.

அதனையடுத்து குறித்த கடைவியாபாரிக்கு எதிராக வழக்குப் பதிவுசெய்து கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தியபோதே தண்டம் விதிக்கப்பட்டது. (ச-22,26)

# வீதியில் கொட்டப்பட்ட மணல் போக்குவரத்துக்கு இடையூறு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். மருதங்கேணி, அம்பன் வீதியில் கடந்த சில நாள்களுக்கு முன் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற டிப்பரை பொலிஸார் துரத்தியபோது சந்தேகநபர்கள் மணலை காப்பெற் வீதியில் கொட்டிவிட்டுத் தப்பிச்சென்ற நிலையில் வீதியில் கொட்டப்பட்ட மணல் இதுவரை அகற்றப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மணல் அகற்றப்படாமையால் குறித்த வீதியில் வாகனத்தைச் செலுத்தும்போது சறுக்கிவிழும் நிலை ஏற்படுவதுடன் விபத்துகளும் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி மணலை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-22,27)



# ஒலிபெருக்கிப் பாவனைக்கு இனி பொலிஸ் அனுமதி!

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் அறிவிப்பு

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அதிக ஒலி எழுப்பப்படுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஒலிபெருக்கிப் பாவனைக்கு பொலிஸாரின் அனுமதிபெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயங்கள், பொது நிகழ்வுகள் மற்றும் வீடுகளில் அதிக ஒலி எழுப்பப்படுவதால் கல்விகற்கும் மாணவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித்தாய்மார் உள்ளிட்ட பல தரப்பினர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தியால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு அந்தப் பிரதேசங்களில் சுவரொட்டிமூலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
28 . 01 . 1956

மறைவு
23 . 03 . 2025

## ஆனந்தி திருஅருட்செல்வம்

இல 36, பாரதி வீதி, சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஆனந்தி திருஅருட்செல்வம் அவர்கள் நேற்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாவட்ட செயலக பதிவாளர் பிரிவில் கடமையாற்றிய திருஅருட்செல்வம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமானந்தம், சிவமகாதேவி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - புதுநாயகம் தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் குகேந்திரன் (விவசாயத் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுதந்தி சந்திரமோகன் மற்றும் அயிலன் (நோர்வே), முகுந்தி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. தயாழினி (சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்) அவர்களின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், திரவியம், துரைசிங்கம், லீலாவதி மற்றும் சுசிலா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தன்மயா, அத்மயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2025) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல 36, பாரதி வீதி,
சுண்டிக்குளி.

தகவல்:
குடும்பத்தினர்
தி. குகேந்திரன் (மகன்) - 077 935 2429

(CS/57817) J-1

# இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், மார்ச் 24

கைதடி கயிற்றசிட்டி கந்தசாமி தேவஸ்தான இலட்சார்ச்சனை உற்சவம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 6 தினங்கள் நடைபெறவுள்ளது. ஏழாவது நாளாகிய எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று வள்ளி, தெய்வானை சமேத சண்முகப் பெருமான் திருவீதியுலா வருவார். கிரியைகள் யாவும் ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ ஜெகநாதக் குருக்கள் சந்திரசேகரக் குருக்களால் நடத்தப்படும்.

(ச-41-159)

## பூநகரியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

பூநகரிப் பகுதியில் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் பூநகரிப் பொலிஸாரினால் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 2 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ச-28)

# பழைய பாடல் பிரதி தேவை

பி.எஸ்.ரங்கா இயக்கத்தில் பி.எஸ்.ராஜா ஐயங்கார், லட்சுமி சங்கர் ஆகியோர் நடித்து 1947 ஆம் ஆண்டு வெளியான பக்த துளசிதாஸ் படத்தின் பாட்டுப் புத்தகம் யாரிடமாவது இருந்தால் ஒரு பிரதி (PDF File) தந்து உதவவும்.
Email : umakanth3@yahoo.com

(CS/57816) J-1

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 30.09.1985 இறப்பு 21.03.2025

சங்க உறுப்பினர் திரு.இராஜமனோகரன் அவர்களின் அன்பு மனைவி
**திருமதி மேனகா இராஜமனோகரன்**
அவர்கள் 21.03.2025 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | :- மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- பாலன் ஜெகதாசனும் பெண் பிரிந்தாவும் |
| விண்ணப்பதாரர் பெயர் | :- திரு. பாலன் ஜெகதாசன் |
| முகவரி | :- அப்பாச்சிப்பிள்ளை வீதி, அளவெட்டி தெற்கு |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 19, அருணாச்சலம் வீதி ஆதன இல. 26 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை "ஒட்டலிவளவும் மறுபிரிவும்" என்ற ஆதனம் திருமதி S. அருணாசலம் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்தநொத்தாரிசு பொ. சுந்தரலிங்கம் முகதாவில் 2022.02.03ம் திகதியில் 6081ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அளவெட்டி இறை "ஒட்டலிவளவும் மறுபிரிவும்" நில.பர. பதினான்கு, குளி பன்னிரண்டு தசம் எட்டு இரண்டும் (நில.பர.14 குளி 12.82) விஸ்தீரணமுள்ள ஆதனம் நாகரத்தினம் ஜெயரத்தினமும் பெண் செந்தில்செல்வமும் (முன்பு அருணாசலம் மகள்) ஆகியோரால் அவர்களது அற்றோனித் தத்துவகாரரான அளவெட்டி மேற்கு சௌபாக்கிய கௌரி பத்மநாதன் மூலம் செயற்பட்டு பாலன் ஜெகதாசனுக்கும் பெண் பிரிந்தாவுக்கும் வந்தடைந்துள்ளது. மேலும் 6081ம் இலக்க உறுதியின் தாய் உறுதிகளாக 1930.06.08ம் திகதி நொத்தாரிசு கு.சு. கனகராயர் 1507ம் இலக்கத்திலும் 1932.05.21ம் திகதி நொத்தாரிசு பொ.கா.சோமசுந்தரம் 6439ம் இலக்கத்திலும் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதிகள் இப்பெயர்மாற்ற விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 6081 ஆம் இலக்க உறுதியில் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்யும் பொருட்டு பிரசித்த நொத்தாரிசு பொ. சுந்தரலிங்கம் முகதாவில் 02.05.2024ஆந் திகதிய 6391ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியும் முடிக்கப்பட்டு அதற்கான உறுதியும் விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த 6391ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில் ஆதனடாப்பில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் நாகரத்தினம் ஜெயரத்தினம் பெண் செந்தில்செல்வத்திற்கு (திருமணத்தின் முன் அருணாச்சலம் மகள்) உரியதாக இருந்து 6081ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதிப்படி எமது சொந்தமும் ஆட்சியுமாக வந்தடைந்துள்ளது. என்பதாலும் குறித்த உறுதியின் உரித்து வரலாற்றில் "2ம் பேரின் தாய் வழிப்பேரன் வேலுப்பிள்ளை கந்தையா எனவும் அழைக்கப்படும் கந்தையாப்பிள்ளை தம்பிப்பிள்ளைக்கு உரியதாக இருந்து அவர் இறக்க, அவரது ஒரே பிள்ளையான 2ம் பேரின் தாய் அருணாசலம் பெண் மரகதத்தைத் தந்தை வழி முதுசொமாக வந்தடைந்து அவவும் இறக்க அவவின் ஒரே பிள்ளையான 2ம் பேரை வந்தடைந்த தாய்வழி முதுசொம்" என்பதற்குப் பதிலாக, தவறுதலாக 2ம் பேரின் தாய் வழிப்பூட்டன் வேலுப்பிள்ளை கந்தையாப்பிள்ளை தம்பிப்பிள்ளையைத் தந்தை வழி முதுசொமாக வந்தடைந்து அவரும் இறக்க அவரது ஒரே மகளான 2ம் பேரின் தாய் அருணாசலம் பெண் மரகதத்தைத் தந்தைவழி முதுசொமாக வந்தடைந்து அவ இறக்க அவவின் ஒரே பிள்ளையான 2ம் பேரை வந்தடைந்த தாய்வழி முதுசொம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனாலும் குறித்த 6081ஆம் இலக்க உறுதியின் மூலப்பிரதி, இணைபிரதி, ஆதாரப்பிரதிகளின் உரித்து வரலாறு "2ம் பேரின் தாய் வழிப்பேரன் வேலுப்பிள்ளை கந்தையா எனவும் அழைக்கப்படும் கந்தையாப்பிள்ளை தம்பிப்பிள்ளைக்கு உரியதாக இருந்து அவர் இறக்க அவரது ஒரே பிள்ளையான 2ம் பேரின் தாய் அருணாசலம் பெண் மரகதத்தை தந்தைவழி முதுசொமாக வந்தடைந்து அவவும் இறக்க அவவின் ஒரே பிள்ளையான 2ம் பேரை வந்தடைந்த தாய்வழி முதுசொம்" என்று வாசிக்கப்பட வேண்டும் என வெளிப்படுத்தி இவ்வுறுதி முடிக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு, மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவு J/219 அளவெட்டி இறை 'ஒட்டலிவளவும் மறுபிரிவும்" நில.பர.13 குளி 07. 1/2 இல் சொரியலாய் 1/3 பங்கு பதிவு (H....) மேற்படி சொரியலாய் 2/3 பங்கு (H78/103) ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.பாலசுப்பிரமணியம் 2021.12.19ம் திகதி 1672/2021ம் இலக்கத்தில் வரைந்த படத்தில் துண்டு1 எனச் சுட்டியுள்ளதன் படி நில.பர. பதினான்கு குளி பன்னிரண்டு தசம் எட்டு இரண்டும் (நில.பர.14 குளி 12.82) கிணறும் செய்பயிர், வான் பயிர்களும்.

இதற்கு எல்லைகள்

கிழக்கு :- பொன்னையா கேதீஸ்வரனுக்கும் சிவபாதம் ஜங்கரனுக்கும் சண்முகலிங்கம் சுதனுக்குரிய ஆதனங்கள்.
வடக்கு :- சிவபாதம் ஜங்கரனுக்கும் சண்முகலிங்கம் சுதனுக்கும் உரிய ஆதனங்களும் ஒழுங்கையும்
மேற்கு :- ஒழுங்கை
தெற்கு :- ஒழுங்கையும் தனியார் பாதையும் மனோகரன் கிரிதரனுக்குரிய ஆதனமும் இவ்வெல்லைப்படி இதடங்கலும்

மேற்குறித்த ஆதனத்தை பாலன் ஜெகதாசன் பெண் பிரிந்தா என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் பாலன் ஜெகதாசன் பெண் பிரிந்தா பெயருக்கு ஆதனஉரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன்சுதர்ஜன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்குபிரதேசசபை**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(CS/57812) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
09 . 08 . 1931

மறைவு
23 . 03 . 2025

## இந்துமதி இராசரத்தினம்

1ம் கட்டை, புலோலி மேற்கு, பருத்தித்துறையினைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இந்துமதி இராசரத்தினம் அவர்கள் நேற்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - தங்கம்மா தம்பதியின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், இந்திராணி, இராசமலர், இராஜசூரியா (ஓய்வுநிலை உதவிப் பொறியியலாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை), காலஞ்சென்ற சோதிமலர், விஜயா (ஓய்வுநிலை ஆசிரியர், யா/சென்தோமஸ் றோ.க.பெ.பாடசாலை) மற்றும் காலஞ்சென்ற இராசேந்திரா அவர்களின் அன்புத் தாயாரும், சிவயோகநாதன், ரகுநாயகம், மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வசீகரன், முகுந்தன், சுகர்னா, மிதுனா, தர்ஷிகா, ஜதிஷன், தர்ஷன், சஜீந்திரா மற்றும் காலஞ்சென்ற மிதுசுஜி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.03.2025) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் கோரியடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1ம் கட்டை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
077 628 1432, 077 904 5041
077 [illegible] 7754

(CR/44648) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு.கா. உறுப்பினர்கள் தே.ம.சக்தியுடன் இணைவு

கொழும்பு, மார்ச் 24
மண்முனைபற்று பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும் மண்முனை பற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளருமான ஏ.ஏ.மதீன் தலைமையிலான ஆதரவாளர்கள், செயற்பாட்டாளர்கள் தேசிய மக்கள் சக்தியோடு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இணைந்துகொண்டுள்ளனர். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மண்முனை பற்றில் அரசாங்கத்தை பலப்படுத்தி உள்ளூராட்சி மன்ற அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்த இணைவு நடைபெற்றுள்ளது. (ச-இ)

## தனியார் கல்வி நிலையங்களின் வீதிகளைச் சூழும் பெற்றோர் சட்டநடவடிக்கைக்கு ஏற்பாடு

**யாழ்ப்பாணம், மார்ச் 24**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார் கல்வி நிறுவனங்களின் முன்வீதியை மறைத்து நிற்கும் பெற்றோருக்கு எதிராகப் பொலிஸார் ஊடாக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு யாழ்.மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது.
இதன்போது யாழ். மாவட்டத்தில் தனியார் கல்வி நிறுவனங்களின் முன்பாகப் பெற்றோர் ஒன்றுகூடி நீண்டநேரம் குறித்த வீதியிலே தரித்துநிற்கின்றனர். இதனால் விபத்து சம்பவங்கள் அதிகளவில் நேர்கின்றன. யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களில் இந்தப் பிரச்சினை தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன என்று யாழ்.மாவட்டச் செயலர் தெரிவித்தார். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சார்பில் வருகை தந்த பிரதிநிதி, கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியைக் கடந்து காங்கேசன்துறை நோக்கிப் பேருந்துகளை இயக்குவதற்கு தனியார் கல்வி நிறுவனங்கள் முன்பாகக் காணப்படும் சனநெரிசல் நெருக்கடியை ஏற்படுத்துகிறது என்று சுட்டிக்காட்டினார். அதற்கு இந்தப் பிரச்சினை தொடர்பாக யாழ் .மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி சட்டநடவடிக்கை எடுப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று யாழ். மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ச-125)




## 27 துப்பாக்கிச்சூடு 22 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 24
2025 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து மார்ச் 23 ஆம் திகதி வரையிலும் 27 துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் இதில் 22 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வெலிகம, அஹுங்கல்ல, தெவிநுவர, கல்கிஸ்ஸ, தொடங்கொட, மன்னார், அம்பலாந்தோட்டை, காலி, கொட்டாஞ்சேனை, மினுவங்கொடை, மித்தெனிய, ஜாஎல, கம்பஹா, வெலிவேரிய, மிதிகம, அம்பலாங்கொட, தெவுந்தர உள்ளிட்ட பல பொலிஸ் பிரிவுகளிலேயே இந்த 27 துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (ச-28)

## இயற்கையோடு ஒன்றித்தல் நல்லூரில் செயலமர்வு




யாழ். நல்லூர்ப் பிரதேச செயலகம் மற்றும் காவேரி கலா மன்றத்தின் ஏற்பாட்டில், "இலங்கை பண்பாட்டுச் சூழலில் இயற்கை உணர்வினைப் புரிந்துகொள்ளல் எனும் கருப்பொருளிலான செயலமர்வு நல்லூர்ப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
இதன்போது காலநிலை மாற்றம், உணவுப் பண்பாட்டுச் சூழல், தொழில்முறை, அன்றாட நடவடிக்கைகளை எவ்வாறு எதிர்கொள்ளல், இயற்கை வளத்தினை மேம்படுத்தல், சுகாதாரப் பிரச்சினைகள், குடிநீர்ப் பிரச்சினை, ஒவ்வாத மனித மாற்றம், அதிகரித்த வெப்பநிலை, கைத்தொழிற் புரட்சியினால் பச்சைவீட்டு விளைவு, பருவகால மாற்றம், மழைவீழ்ச்சி கூடுதல், காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப இசைவாக்கமடைதல் தொடர்பாக விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. (ச-25, 27)



ஊரெழு மடத்துவாசல் சுந்தரபுரி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் அண்மையில் பக்திபூர்வமாகவும் இடம் பெற்றது. (ச-25,66)

## மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 02 . 1944



மறைவு
23 . 03 . 2025

**செல்லப்பா தங்கராசா**

**ஓய்வு நிலை கிளை முகாமையாளர் (சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்)**

சரசாலை வடக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் மத்திய வீதி, மீசாலை கிழக்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தங்கராசா அவர்கள் நேற்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தங்கம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற குழந்தைவேலு சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற விமலாதேவியின் அன்புக் கணவரும், சரஸ்வதி, கமலாதேவி இராஜேஸ்வரி, அற்புதராசா மற்றும் காலஞ்சென்ற ஈஸ்வரி, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினாம்பாளின் அன்பு மைத்துனரும் கஜேந்திரன், சுஜீந்திரன், சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனுஷா, கிரிஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் கபிஷானி, ரிஷானிகா, அபிசேகா, அகர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2025) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று 2.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 929 8301, 077 608 7513

(CR 44655) V-1

## வண்ணை வைத்தீஸ்வரருக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ்.வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தின் மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 21 தினங்கள் இடம் பெறவுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும், 12 ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவனமும் இடம்பெறவுள்ளன. ஏனைய தினங்களில் திருவனந்தல், நான்கு சாமப்பூஜைகள், வசந்த மண்டபப் பூஜை என்பனவும் இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காய்ச்சலால்...

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இவர் கடந்த 19ஆம் திகதி கிளிநொச்சி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, கடந்த 21ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இவர் நேற்றுக்காலை உயிரிழந்துள் ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம குமார் மேற் கொண்டார்.

(அ-எ-26)

## உடைமையில்...

யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப் படையில் சந்தேகநபர்கள் கைதுசெய் யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 805 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட் கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட வர்கள் 22 மற்றும் 23 வயதுடைய வர்கள் என்றும், விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்ப டுத்தப்படு வார்கள் என்றும் பொலி ஸார் தெரிவித்தனர். (அ-எ-26-20)

## தையிட்டிக்காணி...

விகாரையால் சட்டவிரோதமாக ஆக் கிரமிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்க ளின் காணிகளை விடுவிக்கவேண் டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர் கள் வலியுறுத்தியதுடன், கோஷங்க ளையும் எழுப்பினர்.


அந்தப் பகுதியில் பெரும் எண்ணிக் கையான பொலிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந் தது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸா ரின் நடவடிக்கைகள் இருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கைவிலங்குகளுடன் பொதுமக்களை அச்சுறுத்தும் வகை யில் நடந்துகொண்டனர் என்று கூறப் படுகின்றது.

அதேவேளை, வேறிடங்களில் இருந்து சொகுசு பஸ்களில் திறப்புவிழாவுக்கு அழைத்துவரப்பட் டவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களைப் பார்த்துக் கையசைத் துக்கொண்டு சென்றதையும் காண முடிந்தது.

(அ-எ-26)

## மரண அறிவித்தல்

### அமரர் வல்லிபுரம் நாகலிங்கம்



மீசாலை கிழக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நாகலிங்கம் அவர்கள் நேற்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் காசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், நல்லம்மாவின் அன்புக் கணவரும் அமரர்களான சரவணமுத்து, முத்துப்பிள்ளை, பரமகுரு, சுப்பிர மணியம், செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியலீலா, பாக்கியரத்தினம் நாகராசா, சிவராசா, புஸ்பராஜேஸ்வரி (ஜேர்மனி), செல்வராசா (லண்டன்), அமரர் பவதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் கயிலாயபிள்ளை, கணபதிப்பிள்ளை, ரதிதேவி, விக்கினேஸ்வரி, உதயகுமார் (ஜேர்மனி), சியாமளா (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (24.03.2025) திங்கட்கிழமை காலை இடம்பெற்று 11.00 மணியளவில் பூதவுடல் தகனத்துக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு மீசாலை
075 547 1943

தகவல்:
குடும்பத்தினர்

(CR 44554) V-1

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39 வது பட்டமளிப்பு வைபவத்தில் BA – கலைமாணி பட்டத்தை பெறும் திருமதி விஜிதா தமிழ்மாறன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேன்மேலும் பல பட்டங்களை பெறுவதற்கு வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
மாமா, மாமி,
மச்சான்மார், மச்சாள்மார்,
புத்தூர்

(CS/57815) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் புடவையகத்திற்கு அனுபவமுள்ள ஆண் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:-
077 539 6262

(CS/29941) J-1

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




20.03.2025 வியாழக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக 39வது பொதுப் பட்டமளிப்பு நிகழ்வில் கல்வியியல் முதுமாணி (2nd upper) பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட எமது வித்தியாலய ஆசிரியர் திரு. மார்க்கண்டு சதீஸ்வரன் அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/ கச்சாய் மகா வித்தியாலயம்

(CR/44651) J-1

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய், அவர்கள் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணைகளில் விபரிக்கப்பட்டவாறு கோருகின்றார்.
2. இக்கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கோரப்படுகின்றது.
3. இக்கேள்வியானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரியில் 2025.03.24 ஆம் திகதி தொடக்கம் 2025.04.07 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 09.00 தொடக்கம் பி.ப 03.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 2025.04.08 ஆம் திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | கேள்வி எண் | விபரம் | | தேவைப்படும் எண்ணிக்கை | பொருள் வழங்கப்பட வேண்டிய காலம் | கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(16)/03/A 5/STA/2025 கற்றல் உபகரணங்கள் | பெரிய சதுர றூள் கொப்பி | 120 P | 3130 | கொள்வனவுக் கட்டளை வழங்கிய நாளிலிருந்து 15நாட்கள் | 30,000.00 | 2025.06.29 |
| 02 | | நாலு றூள் கொப்பி | 160 P | 3130 | | | |
| 04 | | ஒற்றை றூள் கொப்பி | 160 P | 5600 | | | |
| 05 | | சதுர றூள் கொப்பி | 160 P | 2470 | | | |
| 06 | | சித்திரக் கொப்பி | 40 P | 1565 | | | |
| 07 | | பென்சில் | | 1565 | | | |
| 08 | | குமிழ்முனைப் பேனா | | 2470 | | | |

தலைவர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் (CR/44642)J-1 2025.03.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சட்டவிரோதக்...

திறப்புவிழாவில் சிவில் உடையில் பெரும் எண்ணிக்கையில் பொலிஸ் உயரதிகாரிகளும், பொலிஸ் உத்தியோகத்தர்களும், இராணுவத்தினரும் கலந்து கொண்டனர். சொகுசு பஸ்களில் பிற இடங்களில் இருந்து பௌத்த மதத்தைச் சார்ந்தவர்களும் கொண்டுவந்து இறக்கப்பட்டிருந்தனர்.

**சர்ச்சைக்குரிய சட்டவிரோத விகாரை**

வலிகாமம் வடக்கில் உள்ள தையிட்டிப் பிரதேசத்தில் பொதுமக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்துச் சட்டவிரோதமாக இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் விகாரை அமைக்கப்பட்டுள்ள நிலையில், தங்களது காணிகளை வழங்கக் கோரி காணி உரிமையாளர்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்திவருகின்றனர். தமிழ் மக்களின் கோரிக்கையை கடந்த அரசாங்கங்கள் காதில் வாங்காத நிலையில், அந்த விகாரையை விரிவுபடுத்தும் செயற்பாடுகள் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்தன. அந்தப் பகுதிக்குள் பொதுமக்கள் அனுமதிக்கப்படாத நிலையில் இராணுவத்தினரின் உதவியுடன் இரகசியமான முறையில் நடைபெற்றுவரும் விகாரை விஸ்தரிப்பு நடவடிக்கைகள் பல சந்தர்ப்பங்களில் வெளிக்கொணரப்பட்டிருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டிய தரப்புகளும், அரசாங்க அதிகாரிகளும் மௌனமாகவே இருக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னரும் தையிட்டி விகாரைக்கு எதிரான மக்களின் போராட்டம் தொடர்கின்றது. விகாரை நிர்வாகத்தால் அடாத்தாகப் பிடிக்கப்பட்டிருக்கும் தங்கள் காணிகளை விடுவித்துத்தரவேண்டும் என்று காணிகளின் உரிமையாளர்கள் தற்போதைய அரசாங்கத்திடமும் முன்வைத்திருந்தனர். நாடாளுமன்றத்திலும் இந்த விடயம் பல தடவைகள் பேசப்பட்டிருந்தது. தற்போதைய நாடாளுமன்றத்தின் முதலாவது பாதுகாப்பு அமைச்சு சார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டபோது, "வழிபாட்டுத் தலங்கள் (விகாரைகள்) அமைக்கப்பட்டமை தொடர்பான பிரச்சினை வடக்கு மக்களின் உண்மையான தேவைக்கு அமைய தீர்க்கப்படவேண்டும்" என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்த கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன், "தையிட்டி விகாரை விவகாரம் பாதூரமானது. தமிழ் மக்களின் காணிகள் அங்கு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை" என்று தெரிவித்திருந்தார். ஒருவாரத்துக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி "திஸ்ஸ விகாரைப் பகுதியில் கள ஆய்வுகளை மேற்கொண்டு பிரச்சினை நிவர்த்திசெய்யப்படும்" என்று அறிவித்திருந்தார்.

**சட்டவிரோதக் கட்டுமானம்**

ஆயினும் விகாரை நிர்வாகம் தொடர்ந்தும் தனது சட்டவிரோதக் கட்டுமானங்களைத் தற்போதும் தொடர்கின்றது. எந்த வித அனுமதியும் பெறாது விகாரை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள, பிக்குகளுக்கான மடாலயம் என்று நம்பப்படும் கட்டடத்தை நேற்று பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் விமரிசையாகத் திறந்துள்ளது. சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரை என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ள இந்த விகாரையின் கட்டடத்தை வடக்கு மாகாணத்தின் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் திறந்துவைத்துள்ளமையும், நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் சிவில் உடையில் கலந்து கொண்டுள்ளமையும் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. (அ-எ-26)

## ஏ.ரி.எம்...

ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஒருவரின் வீட்டிலேயே இந்தத் திருட்டு நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் அவர் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். விசாரணைகளின் அடிப்படையில் அந்த வீட்டில் பணிபுரிந்த பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். தொடர் விசாரணைகளிலும், பாதுகாப்புக் கமராப் பதிவுகளின் அடிப்படையிலும் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பின்னர் கைதுசெய்யப்பட்ட மூவரும் திருடப்பட்ட தன்னியக்கப் பணப்பரிமாற்ற அட்டையைக் கொண்டு 20 ஆயிரம் ரூபாவை எடுத்து மதுபானம் கொள்வனவு செய்துள்ளமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் கோப்பாய் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ-எ-26)

## அரச...

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- கடந்த காலங்களில் இருந்த ஆட்சியாளர்கள் நாட்டின் அரச வளங்களை முறைகேடாகப் பயன்படுத்தினார்கள். அதுமட்டுமன்றி அவற்றைத் தமது சொந்தச் சொத்துகளாகவும் கையகப்படுத்தியுள்ளனர். அவற்றை மீளப்பெற்று அரச வளங்களைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

அரச வளங்களைத் தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் பெறப்பட்ட சொத்துகள் மற்றும் நிதிகளை சட்டப்பூர்வமாக பறிமுதல் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ள சட்டவரைவை எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும்போது அது பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கு வழிசமைக்கும் - என்றார். (அ-எ-இ)

## வாக்குச்சீட்டு...

தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மாவட்டச் செயலகங்களில் இருந்து பெறப்படும் வரிசையில் வாக்குச்சீட்டுகள் தொடர்பான விவரங்கள் அரச அச்சகத்துக்கு அனுப்பப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## படுகொலையான...

தாயும் அவரது மகனும் இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டிருந்தனர்.

உயிரிழந்தவர்களுக்குச் சமய முறைப்படி கிரியைகள் செய்து தகனம் செய்வதற்கு அப்போது அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில், கணவர் வேறு வழியின்றி தனது மனைவியினதும், மகனினதும் உடலை வீட்டுவளவிலேயே அடக்கம் செய்துள்ளார். பின்னர் அங்கு கல்லறை ஒன்றைக் கட்டிவிட்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் ஏனைய பிள்ளைகளுடன் அவர் நாட்டைவிட்டு வெளியேறியிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தனது ஏனைய பிள்ளைகளுக்கு அவர் தெரிவித்திருந்ததுடன், மனைவி மற்றும் மகன் ஆகியோருக்கு சமய முறைப்படி இறுதிக்கிரியைகள் செய்யவேண்டும் என்றும் கூறியிருந்தார். அவர் கடந்த ஆண்டு உயிரிழந்த நிலையில், தந்தையின் ஆசையை நிறைவேற்றுவதற்காக நாடு திரும்பிய ஏனைய பிள்ளைகள் தாய் மற்றும் சகோதரனின் உடல்களை மீளத் தோண்டியெடுத்து கிரியைகள் செய்வதற்காக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரியிருந்தனர்.

நீதிமன்று அனுமதி அளித்ததைத் தொடர்ந்து சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டு இந்து சமயக் கிரியைகள் நடத்தப்பட்டு அவர்களின் உடல் எச்சங்கள் மீட்கப்பட்டுத் தகனம் செய்யப்பட்டுள்ளது. (அ-எ-26)

## புதிய...

நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- பல நாடுகளில் உயிர் தியாகம் செய்தே சுதந்திரம் பெற்றனர். எமக்கு இலகுவில் சுதந்திரம் கிடைக்கப்பெற்றதால் சுதந்திரத்தின் பெறுமதி எமக்குச் சரியாகப் புரியவில்லை. அதனால்தான் இனங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டு நாடு பின்நோக்கிச் சென்றது.

அண்மையில் ஏற்பட்ட இளைஞர்களின் எழுச்சியின்போது இளைஞர்கள் இன, மத, குல பேதங்களை முழுமையாக நிராகரித்தனர். காலிமுகத்திடலிலும் ஏனைய இடங்களிலும் அதைக் கண்டோம். நாடாளுமன்றத்தில் இன்றுள்ள கட்சிகள் இனவாதத்தை நிராகரித்துள்ளன. இது வரவேற்கக்கூடிய விடயமாகும். இதனைத் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டுசெல்லவேண்டும்.

இனங்களுக்கிடையிலான நம்பிக்கையின்மை இந்தத் தலைமுறையுடன் முடிவுக்கு வரவேண்டும். அடுத்த தலைமுறைக்கு செல்லக்கூடாது. இனங்களுக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்துவதற்கு சிறு குழுவொன்று முயற்சித்தாலும் அது வெற்றியளிக்காது.

அன்று அனைத்து இன மக்களும் ஒன்றாக கல்வி பயின்றனர், ஒன்றாக விளையாட்டுகளில் ஈடுபட்டனர். 1960களில் தான் இந்த நிலைமை மாறுபட்டது. இன, மத ரீதியாக மாணவர்கள் பிளவுபட்டனர்.

இன நல்லிணக்கம் மற்றும் புதிய அரசியலமைப்புத் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் பேசுகின்றது. இதற்குரிய பணிகள் விரைவில் செய்யப்பட்டால் நல்லது - என்றார். (அ-எ-44)

## வரிசை...

இந்தப் புதிய கட்டடம் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினர் அனைவரும் சிவில் உடையிலேயே நிகழ்வில் கலந்து கொண்டனர். பொலிஸ் அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாகனங்களிலேயே நிகழ்வுக்கு வந்திருந்தனர். 15க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் வாகனங்களும், 10க்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகளின் வாகனங்களும் அங்கு நிறுத்தப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. அரச செலவினத்தைக் குறைப்பதே இலக்கே என்று கூறிக்கொள்ளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இவ்வாறு அரச வாகனங்கள் நல்லிணக்கத்தைக் குழப்பும் நிகழ்வுக்கு பயன்படுத்தப்படுவதையும், அதனால் ஏற்படும் செலவினத்தையும் எவ்வாறு நோக்குகின்றது என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (அ-எ-26)

**பகிரங்க ஏல விற்பனை**

Printer, வாகன ரயர்கள், வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் என்பன 27.03.2025ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பிரதம செயலாளர் அலுவலக வளாகத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

பிரதம செயலாளர்,
வட மாகாணம்,
கைதடி.

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**


பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57780) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



**தோற்றம்**

**17 • 10 • 1957**

**மறைவு**

**23 • 03 • 2025**

# நடேசலிங்கம் பரமேஸ்வரி

யாழ். காரைநகர் களபூமி விளானையைப் பிறப்பிடமாகவும், திக்கரை, வண்ணார்பண்ணை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட நடேசலிங்கம் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகம்மா தம்பதியின் அன்பு மருமகளும், நடேசலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயக்குமார் (முகாமையாளர் SVM Pvt Ltd- கொழும்பு), திருமகள் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருட்செல்வம் (லண்டன்), தனுஜா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தன்சி, குருதாஸ், குருராம், சஸ்விகா ஆகியோரின் அன்புப் பேத்தியும், தர்மபாலன், விஜயரட்ணம், சத்தியலிங்கம், கணேசலிங்கம், காலஞ்சென்ற கனகாம்பிகை, மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திராணி, அம்பிகைபாகன், காலஞ்சென்றவர்களான தியாகலிங்கம், யோகராணி மற்றும் இரத்தினபூபதி, இரதிஸ்வரி, செல்வராணி, வசந்தகுமாரி, நல்லலிங்கம், மகேந்திராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (25.03.2025) செவ்வாய்க்கிழமை மு.ப 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**22, பிரப்பன்குளம் லேன்,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்**

(CS/57814) J-1

ஜெயக்குமார் - மகன் - +94 777 910 697
திருமகள் - மகள் - +44 748 016 9506
அருள் - மருமகன் - +44 771 343 1353

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.